இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் அவர்களின்
செயல்முறை ஆணை, சென்னை – 106.
முன்னிலை:திருமதி.மைதிலி க இராஜேந்திரன் இ.ஆ.ப.,

ந.க.எண்:5445/நி2/3/2023 நாள்: 17.07.2023

பொருள் நிர்வாகம் – இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம், சென்னை – திரு.வெ.கார்த்திக், இளநிலை உதவியாளர், மாவட்ட சித்த மருத்துவ அலுவலகம், கோவை (இ) திருப்பூர்,– பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. சென்னை, தமிழ்நாடு அரசு தேர்வாணைய செயலாளரின் கடித.ந.க.எண்:2383/PSD–12/2020, நாள்:13.10.2021
2. சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடித ந.க.எண்.31495/E2/2/2020, நாள்.03.11.2021
3. சென்னை, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை இயக்குநரின் பணிநியமன மற்றும் பணியமர்த்தல் ஆணை ந.க.எண்:13479/நி2/3/2021 நாள்: 25.11.2021

*****

ஆணை:–

**1.**பார்வை (1)–ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வை (2)–ல் காணும் சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் மறு ஒதுக்கீடு மூலம் இவ்வாணையகரத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (3)–ல் காணும் இவ்வாணையரக பணிநியமன ஆணை மூலம் கோவை (இ) திருப்பூர் மாவட்ட சித்த மருத்துவ அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.வெ.கார்த்திக் என்பவரின் தற்காலிக பணிகள் 08.12.2021 முற்பகல் முதல் (அதாவது பணியில் இணைந்த நாள் முதல்) பணிவரன் முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

2.பார்வை (1)–ல் உள்ள கடிதத்தில் சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்–IV தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.வெ.கார்த்திக் இளநிலை உதவியாளரின் பணியானது தற்காலிகமானது என்றும், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையிலுள்ள இத்தேர்வு தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளதால் அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

(த.பி.பா)

3.மேற்காணும் இளநிலை உதவியாளர் பணியில் இணைந்த நாள் முதல் அவரது தற்காலிகப் பணிகள், தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனை) விதிகள், விதி 28-ன் படி, பணிவரன் முறை செய்யப்பட்டு, தகுதிகாண் பருவத்தில் அமர்த்தப்படுகிறார். மேலும் நடைமுறையில் உள்ள பணி விதிகளின் படி, தகுதிகாண் பருவமான இரண்டு வருட காலத்தை தொடர்ந்து மூன்று வருட பணிக்காலத்திற்குள் முடித்திடவும் மேலும், அக்கால அளவிற்குள் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பெறும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி மற்றும் தமிழ்நாடு மருத்துவ விதி தொகுப்பு தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

மைதிலி க இராஜேந்திரன்
இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதி ஆணையர்

பெறுநர்
திரு.வெ.கார்த்திக்
இளநிலை உதவியாளர்,
மாவட்ட சித்த மருத்துவ அலுவலகம்,
கோவை (இ) திருப்பூர்.
– உரிய வழிமுறையாக

நகல்
1.மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்
கோவை (இ) திருப்பூர்.
2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் .இயக்குநர், சென்னை-6
3. பணிப்பதிவேடு
4. இருப்பு கோப்பு

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

உதவி இயக்குநர் 19/7/23